## R 5803 (page 346)

# “இந்தக் கனம் அவருடைய பரிசுத்தவான்கள் யாவருக்கும் உண்டாகும்”

## "THIS HONOR HAVE ALL HIS SAINTS”

“பரிசுத்தவான்கள் மகிமையோடே களிகூர்ந்து, தங்கள் படுக்கைகளின்மேல் கெம்பீரிப்பார்கள். ஜாதிகளிடம் பழிவாங்கவும், ஜனங்களைத் தண்டிக்கவும், அவர்களுடைய ராஜாக்களைச் சங்கிலிகளாலும், அவர்களுடைய மேன்மக்களை இருப்பு விலங்குகளாலும் கட்டவும், எழுதப்பட்ட நியாயத்தீர்ப்பை அவர்கள் பேரில் செலுத்தவும், அவர்கள் வாயில் கர்த்தரை உயர்த்தும் துதியும், அவர்கள் கையில் இருபுறமும் கருக்குள்ள பட்டயமும் இருக்கும். இந்தக் கனம் அவருடைய பரிசுத்தவான்கள் யாவருக்கும் உண்டாகும்.” (சங்கீதம் 149 :5,9)

இன்னும் மாம்சத்தில் இருக்கக்கூடிய கர்த்தருடைய பிள்ளைகளாகிய பரிசுத்தவான்களுக்கு எசேக்கியேல், சகரியா, வெளிப்படுத்தின விசேஷம் முதலியவைகளை உள்ளடக்கிய அனைத்து தேவனுடைய வசனங்களையும் முழுவதுமாக புரிந்துகொள்ளக்கூடிய ஒரு காலம் வரும் என்பதை நாம் புரிந்து கொள்கிறோமோ என்று நாம் அடிக்கடி கேட்கப்படுகிறோம். இதற்கு பதிலாக, கேள்வி கேட்டவர்களுக்கு பதினெட்டு நூற்றாண்டுகளுக்கு (தற்போது பத்தொன்பது நூற்றாண்டுகளுக்கு) முன்பு பரிசுத்த பவுல் எழுதினதை ஞாபகப்படுத்துகிறோம். “தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள்.” “தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள்.” ஆகையால் பரிசுத்த பவுலும் அவரது காலத்தைச் சேர்ந்த மற்ற கிறிஸ்தவர்களும் “ஆவியின் பட்டயத்தை” வைத்திருந்தார்கள் என்பதை புரிந்துகொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம். தேவனுடைய வசனத்தின் சில குறிப்பிட்ட பகுதிகளை அவர்களும் புரிந்து கொள்ளவில்லை; ஏனெனில் அது புரிந்துகொள்ள ஏற்றகாலம் அல்ல. உதாரணத்திற்கு, தானியேலின் தீர்க்கதரிசனம் முடிவு காலம் மட்டும் முத்திரிக்கப்பட்டு இருக்கும் என்று தேவதூதன் சொன்னான். அநேக மற்ற தீர்க்கதரிசனங்களும் அப்பொழுது வெளியாக்கப்படவில்லை. இது ஏறக்குறைய எல்லா காலங்களிலும் உண்மையாக இருக்கிறது. தீர்க்கதரிசனமானது படிப்படியாக வெளியாகும் தற்காலம் முன்னிருந்ததைக்காட்டிலும் அதை புரிந்து கொள்ளக்கூடிய ஏற்ற காலமாக இருக்கிறது.

ஆகையால் வரக்கூடிய காலங்களில் வேதாகமத்திற்கு மதிப்பு இருக்காது என்று நாம் புரிந்துகொள்ளக்கூடாது. மாறாக,

### R5804 : page 346

அதற்கு அதிக மதிப்பு இருக்கும். வேதாகமம் அப்பொழுது தேவனுடைய சித்தத்தை வெளிப்படுத்துகின்ற ஒரே கருவியாக இராதபடி, நாம் இப்பொழுது சரித்திரங்களை பயன்படுத்துவது போல தகவல்களை தருகிற ஒரு கருவியாக இருக்கும். அது மனிதர்களுக்கு தேவனுடைய பிரமாணங்கள் முதலானவைகளை தெளிவாக விளக்கும். வேதாகமம் விவரித்து பேசுகிற ஒவ்வொரு காரியத்தையும் திரையின் இந்தப்பக்கம் நாம் இருக்கும்போது சபையானது தெளிவாகப் பார்க்கும். அப்போஸ்தலர் கூறுகிறதாவது: “இப்பொழுது நாம் கண்ணாடியில் நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம். அப்பொழுது முகமுகமாய் பார்ப்போம்.” நாம் தெளிவாகப் பார்ப்போம். ஏனெனில் நாம் அப்பொழுது நமது கர்த்தரைப் போல் இருப்போம். இப்பொழுது நாம் கொஞ்சமாக அறிந்திருக்கிறோம். ஆனால் அப்பொழுது நாம் அறியப்பட்டிருக்கின்றபடியே அறிந்துகொள்ளுவோம். (1 கொரிந்தியர் 13:12)

வேதாகமம் எதிர்காலத்தில் பயன்படுத்தப்படும் என்றும், இந்த புத்தகங்களில் எழுதப்பட்டுள்ளபடி உலகமனைத்தும் நியாயந்தீர்க்கப்படும் என்றும் வேதவாக்கியங்கள் நமக்கு கூறுகின்றன. மேலும் அது புத்தகங்கள் (பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள்) திறக்கப்படும் என்று அறிவிக்கிறது. அதுவரை அவைகள் திறக்கப்படவில்லை என்பதை இது உணர்த்துகிறது. (வெளிப்படுத்தல் 20:12) அவைகள் தற்போது தேவனுடைய ஜனங்களுக்கு நன்றாக திறந்திருக்கின்றன. விசுவாசவீட்டாருக்கு ஒவ்வொரு வேளையிலும் “காலத்திற்கேற்ற உணவு” கிடைக்கிறது என்றும் நாம் விசுவாசிக்கிறோம். தற்காலத்தைப்போல

முற்காலத்தில் ஆவிக்குரிய காரியங்களைப்பற்றிய அறிவு இந்த அளவுக்கு தேவைப்படவில்லை. புத்தகங்கள் தற்போது விரிவாக திறக்கப்பட்டிருப்பது போல இதற்குமுன் திறக்கப்படவில்லை. தற்போது தேவனுடைய முழு திட்டமும் மிகவும் தெளிவாக பிரகாசிக்கிறது. இந்த புத்தகங்கள் உயிர்த்தெழுதலின் மாறுதலுக்காக திரைக்கு இந்தப்பக்கம் இருக்கிற கர்த்தருடைய ஜனங்களால் புரிந்து கொள்ளப்படும். இதைத்தவிர வேறு எதையும் நாம் அறியோம்.

## தற்போது வேலை நடந்து கொண்டிருக்கிறது

தற்காலத்தைப்பற்றி பேசும்போது நாம் நினைப்பது போல தீர்க்கதரிசி தாவீது, “பரிசுத்தவான்கள் மகிமையோடே களிகூர்ந்து, தங்கள் படுக்கைகளின் மேல் கெம்பீரிப்பார்கள்” என்று கூறுகிறார். தேவனுடைய பிள்ளைகள் சோதனையிலும் கூட சந்தோஷமாக இருக்க வேண்டும். இந்த அனுபவங்கள் நமது குணலட்சண அபிவிருத்திக்கும், இராஜ்ய மகிமைக்கு, நம்மை தயார்படுத்தவும். கிரியை நடப்பிக்கிறது என்பதை நாம் அறிய வேண்டும். இந்த காலத்தில் பரிசுத்தவான்கள் தேவனை ஸ்தோத்தரித்து பாடும்போது தங்கள் படுக்கைகளின் மேல் இளைப்பாறுவார்கள் என்று சங்கீதக்காரன் இங்கே முன்னுரைக்கிறார். படுக்கைகள் என்பது ஒருவரது விசுவாசத்தையோ அல்லது ஒருவரது முழு மத நம்பிக்கையையோ குறிக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ளும்வரை இந்த அறிக்கை அர்த்தமற்றதாக இருந்திருக்கும்.

**R5804 : page 347**

சிலர் சிறிய விசுவாசமாகிய படுக்கையில் படுத்திருக்கிறார்கள். அது அவர்களுக்கு இடம் போதாமலும் வெதுவெதுப்பானதுமான சுகமாகவும் இல்லாதிருக்கிறது. உண்மையான தேவனுடைய பரிசுத்தவான்கள் இந்த காலத்தில் போதுமான முழு படுக்கையிலும், முழுவதும் மூடக்கூடியதும் வெது வெதுப்பானதுமான சுகமான படுக்கையிலும் இளைப்பாறுவார்கள். இந்த தீர்க்கதரிசன படம், தேவனுடைய பிள்ளைகள் சுகமான விசுவாசத்தில் இளைப்பாறுவதையும் மற்றவர்கள் ஓய்வின்றி அசௌகரியத்தில் இருப்பதையும் காண்பிக்கிறது. நல்ல படுக்கைகளின் ஓய்வு எடுப்பது அவர்களது நல்ல மனோபக்குவத்தை குறிக்கிறது. கர்த்தரை துதிக்கும்போது அவர்கள் “இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தை” திறமையாக பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கையிலுள்ள பட்டயம் வேதாகமம் ஆகும். தேவனுடைய வசனத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் பற்றிய முழு அறிவையும் அவர்கள் பெற்றிருக்க வேண்டும் என்று அவசியமில்லை. ஆனால் இந்த காலத்தில் பட்டயத்தை சரியானபடி பயன்படுத்தக்கூடிய அளவுக்கு அனைத்து அறிவையும் உடையவர்களாக இருப்பார்கள். இந்த காலத்திற்கு என்று தேவன் திட்டமிட்டிருந்த அனைத்து அறிவையும் பெற்றிருப்பார்கள்.

“அவர்கள் வாயில் கர்த்தரை உயர்த்தும் துதி” இருக்க வேண்டும் என்று சங்கீதக்காரன் கூறுகிறார். பரிசுத்தவான்கள் எப்பொழுதைக் காட்டிலும் தற்போது தேவனை அதிக அறிவுடன் துதிக்க முடியும். தேவனுடைய குணலட்சணங்களை மிக நன்றாக நாம் காண முடியும். ஏனென்றால் அறியாமை, தவறான அபிப்ராயம், மாயை, தெளிவின்மை எல்லாம் பறந்து போயின, தேவனுடைய வார்த்தை எப்பொழுதைக் காட்டிலும் அதிகமாக பிரகாசிக்கிறது. நமது சகோதரர் ஜான் கேல்வின் வாயில் கர்த்தரை உயர்த்தும் துதியின் சத்தத்தை நம்மால் கேட்க முடியவில்லை. ஏனெனில் அது கோடான கோடி ஜனங்களுக்கு நித்திய ஆக்கினையை தேவன் கொடுப்பார் என்று அறிவிக்கிறதற்கான கர்த்தரை உயர்த்தும் துதி நிச்சயமாக அல்ல. அல்லது தற்காலத்தில் இந்த பயங்கரமான போதனையை போதிக்கிற ஜனங்களின் வாயிலிருந்து வரும் கர்த்தரை உயர்த்தும் துதியும் அல்ல.

தேவனுடைய நாமம் அனுதினமும் தூஷிக்கப்படுகிறது. அவரது மகிமையான குணலட்சணம் இழிவுபடுத்தி தவறாக அறிவிக்கப்படுகிறது. தேவன் ஒரு பேய்த்தனமான திட்டத்தை வைத்திருக்கிறார் என்று உலகம் போதிக்கப்பட்டிருக்கிறது. மனுக்குலத்தில் பெரும்பாலானவர்களை வதைப்பதற்காக தேவன் நரகம் என்ற ஒரு இடத்தை தயார்படுத்தி வைத்திருக்கிறார். அங்கே, பேய்களை இந்த வதைக்கிற வேலையை நித்தியமாக காலாகாலமாக செய்வதற்கு முன்னரே வைத்திருக்கிறார். இப்படிப்பட்ட நம்பிக்கைகளுடனும் போதனைகளுடனும் இணைந்து உயர்த்தும் துதி எதுவுமில்லை, ஆனால் இதற்கு முன்பிருந்ததைக் காட்டிலும் தேவனுடைய பிள்ளைகள் அவரது வசனத்திற்கு நெருங்கியிருந்து தேவனுடைய அன்பு, ஞானம், நீதி மற்றும் வல்லமை ஆகியவைகளைப் பற்றிய ஆச்சரியமான கதைகளை கூறக்கூடியவர்களாயிருக்கிறார்கள். தவறுகளை

கட்டி, விலங்கு போடுகிற வேலையை சத்தியமானது நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. தலைப்பு வசனத்தில் சங்கீதக்காரன் கூறுகிற வார்த்தைகள் இந்த காலத்தில் நிறைவேறிக் கொண்டிருக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம். இங்கே தெளிவாக வரையப்பட்ட மகா வேலையில் நாம் ஓரளவுக்கு முன்னரே ஈடுபட்டிருக்கிறோம்.

----------------------